தினகரன்
செப்டம்பர் 30, 2024 திங்கட்கிழமை

# கடற்கரையில் தூய்மை பணி

புதுச்சேரி, செப். 30: தூய்மையே சேவை நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, புதுச்சேரி ஜிப்மர் சார்பில் காந்தி சிலை அருகே உள்ள கடற்கரை பகுதியில் நேற்று தூய்மை பணி நடைபெற்றது. இப்பணியை ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் துவக்கி வைத்தார். இதில் டீன் (கல்வி) விக்ரம் படே, மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன், துணை இயக்குனர் ரங்கபாஷியம், மூத்த நிதி ஆலோசகர் வர்ஷினி அருண் மற்றும் 500க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள், ஜிப்மர் ஊழியர்கள் கலந்துகொண்டு புதுவை கடற்கரை முழுவதும் இருந்த குப்பைகளை அகற்றி சுத்தம் செய்தனர்.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
30.9.2024 (திங்கட்கிழமை)

### 'தூய்மை இந்தியா' திட்டத்தின் கீழ்

# கடற்கரை சாலை, கனகன் ஏரியில் துப்புரவுப்பணி

புதுச்சேரி, செப்.30-
தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கனகன் ஏரி, கடற்கரை சாலையில் நேற்று தூய்மைப் பணி நடந்தது.

## தூய்மை பணி

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகார அமைச்சகத்தின் 'தூய்மை இந்தியா' திட்டம் தொடங்கி 10-வது ஆண்டு நிறைவை கொண்டாடும் பொருட்டு 'தூய்மையே சேவை 2024' என்ற பிரசாரம் நடந்து வருகிறது. இந்த ஆண்டு தூய்மை பழக்கம், தார்மீக ஒழுக்கம் என்ற கோட்பாட்டினை வலியுறுத்தும் வகையில் உழவர்கரை நகராட்சி சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக கனகன் ஏரியில் நேற்று தூய்மைப் பணி நடந்தது. பணிகளை உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் தொடங்கி வைத்தார். இதில் முன்னாள் ராணுவ வீரர்கள், புதுச்சேரி நலப்பணிச்சங்க உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், நர்சிங் கல்லூரி மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். இந்த துப்புரவு பணியின் போது சுமார் 400 கிலோ குப்பைகளை சேகரித்தனர்.

## ஜிப்மர்

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவக்கல்லூரி சார்பில் கடற்கரை சாலையில் நேற்று காலை தூய்மைப் பணி நடந்தது. இதை ஜிப்மர் இயக்குனர் டாக்டர் ராகேஷ் அகர்வால் தொடங்கி வைத்தார்.

ஜிப்மர் பேராசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் இணைந்து துப்புரவுப்பணியை மேற்கொண்டனர். அப்போது கடற்கரை சாலையில் கிடந்த சுமார் 500 கிலோ குப்பைகள் சேகரிக்கப்பட்டன.